உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டால் அந்த சொசைட்டி சரிவர நடக்கும். அப்படி உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இருப்பதால்தான் பல புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. விசாரணைக்கு வருவதற்கு இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றபடியால்தான் அந்த சொசைடி சரிவர நடைபெறவில்லை. அதன் காரணமாக உடனடியாக அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN: உண்மையான புகார்களாக இருந்தால் அவற்றை சுலபமாக விசாரிக்கலாம். ஆதாரமற்ற புகார்களை அனுப்பினால் அதைப்பற்றி விசாரிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு மிகவும் கால தாமதம் ஆகிறது. அந்த சொசைட்டி மீது அனுப்பப்பட்ட புகார்கள் எல்லாம் ஆதாரமற்றவைகளாக இருக்கின்றன. அதனால் அவைகளைப்பற்றி விசாரிக்க காலதாமதமாகிறது. ஆதாரம் இருக்கிறதா என்று தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால்தான் அந்த சொசைட்டி சம்பந்தமான புகார்களுக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு காலதாமதம் ஆகிறது.

Potato cultivation

* 367 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லா, கோபிச்செட்டிப்பாளையம் தாலுகா, தாளவாடி மலைப்பிரதேசத்தில் உருளைக் கிழங்கு உற்பத்திக்கான திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா ?

(ஆ) அப்படியானால் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM: உருளைக் கிழங்கு உற்பத்திக்கு மண் வளம் சீதோஷ்ண ஸ்திதி முதலியவைகள் நீலகிரி ஜில்லாவில் இருப்பது போன்றுதான் தாளவாடி மலைப் பிரதேசத்தில் இருக்கிறது என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து, அங்கு உருளைக் கிழங்கு உற்பத்திக்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: உருளைக்கிழங்கு உற்பத்திக்கு மண் வளம் மட்டும் போதாது. காட்டு மிருகங்கள் உபத்ரவம் இல்லாமல் இருக்க வேண்டும். மண் அரிப்புக்கு இடம் இருக்கக்கூடாது. அம்மாதிரி இல்லாத பிரதேசங்களைப் பார்த்துத்தான் உருளைக்கிழங்கு பயிரிடுவதற்கு எவ்வளவு சாத்தியம் என்று பார்த்து அங்கே பயிரிடப்படுகிறது. அது விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

22nd August 1960]

SRI A. VEDARATHNAM: சமவெளி பிரதேசங்களில் உருளைக்கிழங்கை சாகுபடி செய்வதற்கு, அதாவது ஓரத்தநாடு போன்ற இடங்களில் இம்மாதிரி சாகுபடி செய்வதற்கு அரசாங்கம் ஊக்கமளிக்க முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

Works for the drought affected people of Erode taluk

* 368 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have received any representations from the people of Erode taluk on 10th June 1960 regarding the formation of pond works, laying of roads and provision of works for the drought affected people of Erode taluk and if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.

SRI N. K. PALANISAMI: Sir, since all the wells in those areas have dried up and there is a continuous famine for the past 16 years, will the Government sympathetically consider the matter and take steps to deepen all the wells and repair some fishing ponds in that area?

THE HON. SRI M. A. MANICKAVELU: Steps have already been taken. Last year a sum of Rs. 2,27,000 was allotted and a major portion of it was spent. This year also they have asked for Rs. 2 lakhs and the matter is being looked into.

SRI N. K. PALANISAMI: Sir, my question has not been answered. My question is, what measures the Government have taken to prevent the recurrence of famine?

THE HON. SRI M. A. MANICKAVELU: Preventive measures cannot be taken by any human agency in regard to this matter. God should be merciful and give us rains.

Hundred-rupee notes

* 369 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have recommended to the Union Government for the demonstration of hundred-rupee notes?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that even genuine notes are exchanged at below par and at discount and if so, what steps the Government have taken to remove this scare of circulation of forged notes?

THE HON. SRI C. SUBRAMANIAM: I hope the hon. Member does not wish to raise a scare on this. I will be making a statement on the matter shortly.